# தெற்கு vs வடக்கு

வட இந்தியாவில் பிறந்த குழந்தையொன்றையும், தென்னிந்தியாவில் பிறந்த குழந்தையொன்றையும் ஒப்பிடுவோம்.

தென்னிந்தியாவில் பிறந்த குழந்தை அவளுடைய முதல் வயதிலேயே இறப்பதற்கான வாய்ப்பு மிகவும் குறைவு. மகப்பேறின் போது அவள் தன்னுடைய அம்மாவை இழப்பதற்கான வாய்ப்பும் குறைவு என்பதோடு அவள் சிறந்த ஊட்டச்சத்துப் பெறுவதற்கான வாய்ப்பும் அதிகமாக இருக்கும்.

அவள் பள்ளிக்கூடத்துக்குச் செல்வதோடு அங்கு நீண்டகாலம் படிக்கவும் அதன் பின் கல்லூரிக்குச் சென்று படிப்பதற்கான வாய்ப்பும் அதிகம். வட இந்தியாவில் வசிக்கும் அவளையொத்த பெண்களுடன் ஒப்பிடும்போது இவள் வேளாண்துறையில் ஈடுபடுவதற்கான வாய்ப்பு குறைவு என்பதோடு அதிக ஊதியம் பெறும் வேலை கிடைப்பதற்கான வாய்ப்புகள் அதிகம்.

இந்தக் குழந்தை எதிர்காலத்தில் குறைவான குழந்தைகளையே பிரசவிக்கும், அக்குழந்தைகள் நல்ல ஆரோக்கியமாகவும் இவளைவிட அதிகம் படித்தவர்களாகவும் இருப்பார்கள். சுருக்கமாகச் சொன்னால், தென்னிந்தியாவில் பிறக்கும் சராசரி குழந்தை வட இந்தியாவில் பிறக்கும் குழந்தையை விட ஆரோக்கியமாக, நல்ல வசதியுடன், பாதுகாப்பான வாழ்க்கையை வாழும்.

வட இந்தியாவை விட தென்னிந்தியா ஏன் சிறப்பாக செயல்படுகிறது? அதன் அர்த்தம் என்ன?

இது குறித்து சிறப்பாக விவாதிக்கப்பட்டிருக்கும் இந்தப் புத்தகத்தில் தரவியல் விஞ்ஞானி (Data Scientist) நீலகண்டன் ஆர்எஸ் நாட்டில் இருக்கும் மற்ற மாநிலங்களை விட தெற்கிலிருக்கும் மாநிலங்கள் ஏன், எப்படி சிறப்பாகச் செயல்படுகின்றன என்பதை மட்டும் சொல்லாமல் தொடர்ந்து மையப்படுத்தப்பட்டுவரும் இந்தியாவில் இதனுடைய விளைவு எப்படியிருக்கும் என்பதையும் எழுதியிருக்கிறார்.

குறிப்பிட்ட சில கடுமையான பிரச்சனைகளை - சுகாதாரம் கல்வி, பொருளாதார வளர்ச்சி ஆகிய துறைகளில் - தண்டிக்கக்கூடிய கொள்கைகளைக் கொண்ட ஆட்சியின் மத்தியில் எப்படி எதிர் கொண்டு வெற்றிபெற்றது என்பதையும் மக்கள்தொகையைக்

கட்டுப்படுத்துவதில் வெற்றி பெற்றதால் மக்கள் பிரதிநிதித்துவத்தை இழப்பதற்கான சாத்தியக்கூறுகளைச் சந்திக்க வேண்டியிருக்கும் என்பதையும் வெளிப்படுத்துகிறார். இத்தகையத் தாக்குதலை மாநிலம் எப்படிக் கையாளப் போகிறது?

காத்திரமான, வருத்தமடையச் செய்கிற, பரவசப்படுத்தக்கூடியத் தரவுகள் கொண்ட *தெற்கு vs வடக்கு* என்கிற இந்தப் புத்தகம் இன்றைக்கு இந்தியா எதிர் கொண்டிருக்கும் ஒரு மிகப் பெரிய சவால் குறித்து எழுதப்பட்டிருக்கும் முக்கியமான புத்தகமாகும்.

# தெற்கு vs வடக்கு

## இந்தியாவின் பெரும் பிளவு

நீலகண்டன் ஆர்எஸ்

juggernaut

JUGGERNAUT BOOKS
C-I-128, First Floor, Sangam Vihar,
Near Holi Chowk, New Delhi 110080, India

English edition first published by Juggernaut Books 2022
Tamil edition first published by Juggernaut Books 2023

Copyright © Nilakantan RS 2022
Translation copyright © Juggernaut Books 2023

10 9 8 7 6 5 4 3 2 1

P-ISBN: 9788195996957
E-ISBN: 9788195996940

The views and opinions expressed in this book are the author's own. The facts contained herein were reported to be true as on the date of publication by the author to the publishers of the book, and the publishers are not in any way liable for their accuracy or veracity.

All rights reserved. No part of this publication may be reproduced, transmitted, or stored in a retrieval system in any form or by any means without the written permission of the publisher.

Tamil translation by Siddharthan Sundaram

Typeset and proofread by TranslationPanacea, Pune

Printed at Gopsons Papers Pvt. Ltd. Noida

*கவனத்தை எதிர்பார்க்கும் என்*
*நேசத்துக்குரிய சென்னைக்கு*

# உள்ளடக்கம்


அறிமுகம் 1

**பகுதி I : சீராய்வு** **13**

1. சுகாதாரம் 15
2. கல்வி 56
3. பொருளாதாரம் 90
4. தெற்கு ஏன் சிறப்பாகச் செயல்பட்டுள்ளது? 128

**பகுதி II : இந்தியாவின் கொடிய பிரச்சனைகள்** **137**

அறிமுகம்: தென்னிந்தியா சமமான ஒரு கூட்டாளியா? 139

1. மக்கள்தொகை வேறுபாடு 141
2. இந்தியாவின் பணப் பை: ஒன்றியம் vs மாநிலங்கள் 165
3. இந்திய ஒன்றியத்தை தற்போதிருக்கும் அதன் வடிவத்தில் மீட்டெடுக்க முடியுமா? 203

**பகுதி III : முழுநிறைவான ஒன்றியம்** **207**

அறிமுகம்: சிறந்த ஒன்றியத்தைக் கற்பனை செய்தல் 209

1. இந்தியாவின் பிரதிநிதித்துவ ஜனநாயகத்தைப் பாதிப்பது என்ன? 213
2. ஏதெனியன் மாதிரி 234
3. மாற்று வழி 246

***முடிவுரை*** ***263***

***குறிப்புகள்*** ***267***

***ஆசிரியர் மற்றும் மொழிபெயர்ப்பாளர் பற்றிய குறிப்பு*** ***270***

# அறிமுகம்

## தென் இந்தியா: ஒரு வித்தியாசமான நாடு

இந்தியாவில் ஒரு குழந்தை பிறக்கிறது என வைத்துக் கொள்வோம்.

முதலாவதாக, மக்கள்தொகை வளர்ச்சி விகிதத்தை வைத்துப் பார்க்கும் போது இந்தக் குழந்தை வட இந்தியாவில் பிறப்பதை விட தென் இந்தியாவில் பிறப்பதற்கான வாய்ப்பு மிகவும் குறைவாகும். இருப்பினும், இக்குழந்தை தென்னிந்தியாவிலேயே பிறப்பதாக வைத்து கொள்வோம். இந்தியாவுடன் ஒப்பிடும் போது தென்னிந்தியாவில் கைக்குழந்தைகளின் இறப்பு விகிதம் குறைவு என்பதால் இவள் பிறந்த முதல் ஆண்டிலேயே இறப்பதற்கான வாய்ப்பு மிகவும் குறைவாகும். புதிதாகப் பிறந்த சராசரி இந்தியக் குழந்தையைவிட நோய்களுக்கு எதிரான தடுப்பூசி போட்டுக் கொள்வதற்கான வாய்ப்புகள் இவளுக்கு அதிகமாகும், பிரசவத்தின் போது தனது தாயை இவள் இழப்பதற்கான வாய்ப்பு குறைவாக இருப்பதோடு குழந்தை பராமாரிப்பு சேவைகளையும், சிறந்த ஊட்டச்சத்தையும் பெறுவதற்குமான வாய்ப்புகள் அதிகமாக இருக்கும்.

இவளுக்குத் தனது ஐந்தாவது பிறந்த நாளைக் கொண்டாடுவதற்கான வாய்ப்பும், நோய்வாய்ப்பட்டால் மருத்துவமனையை அல்லது மருத்துவரை அணுகுவதற்கான வாய்ப்பும் அதிகமாக இருப்பதோடு சற்று நீண்ட ஆயுளைப் பெறுவதற்கான வாய்ப்பும் உண்டு. இவள் பள்ளிக்குச் செல்வது மட்டுமல்லாமல் அதிக நாட்கள் பள்ளிக்குப் போவதற்கும் அதன் பின் இந்தியாவில் இருக்கும் இவள் வயதில் இருப்பவர்களுடன்

ஒப்பிடுகையில் கல்லூரிக்குச் சென்று படிப்பதற்கான சாத்தியக்கூறும் அதிகமாக இருக்கும். பொருளாதார வாழ்வாதாரத்துக்காக இவள் விவசாயத்தில் ஈடுபடுவதற்கான வாய்ப்பு குறைவாக இருப்பதோடு அதிக ஊதியம் கிடைக்கும் வேலை கிடைப்பதற்கான வாய்ப்பு அதிகமாக இருக்கும்.

எதிர்காலத்தில் இந்தியாவின் மற்ற பகுதிகளில் வாழும் இவளை ஒத்தவர்களுடன் ஒப்பிடும் போது இவள் குறைவான குழந்தைகளுக்குத் தாயாவாள், அந்தக் குழந்தைகள் இவளை விட நல்ல ஆரோக்கியத்துடனும், அதிகமாகப் படிக்கவும் செய்வார்கள். இவளுடைய சமகாலத்தவர்களைக் காட்டிலும் அதிக அரசியல் பிரதிநிதித்துவமும் வாக்காளர் என்கிற முறையில் அதிகமான தாக்கத்தையும் ஏற்படுத்துவாள். சுருக்கமாகச் சொன்னால், வட இந்தியாவில் பிறக்கும் குழந்தையை விட தென்னிந்தியாவில் பிறக்கும் சராசரியான குழந்தை ஆரோக்கியமாகவும், ஓரளவுக்கு நல்ல வசதியுடனும், மிகுந்த பாதுகாப்புடனும், அதிக சமூகத்தாக்கம் கொண்ட வாழ்க்கையும் வாழும்.

இந்தியாவில் சமநிலையற்ற பிராந்தியத் தன்மை என்பது ஒருபோதும் இப்போதிருக்கும் அளவுக்கு தென் மாநிலங்களுக்கு ஆதரவாக இருந்ததில்லை. இந்தியா சுதந்திரமடைந்தபோது, வளர்ச்சிக் காரணிகளைப் பொருத்தவரையில் தென் மாநிலங்களுக்கும் இந்தியாவிலிருக்கும் மற்ற மாநிலங்களுக்கும் இடையில் வித்தியாசம் ஒன்றும் பெரிதாக இல்லை. இன்றைக்கு வட இந்தியாவில் இருக்கும் சில மாநிலங்களுக்கும் தென் மாநிலங்களுக்கும் இடையே இருக்கும் வளர்ச்சியானது அப்பட்டமாக சஹாரா கீழமை ஆப்பிரிக்காவுக்கும் (sub-Saharan Africa) பொருளாதார ஒத்துழைப்பு மற்றும் வளர்ச்சி அமைப்பு (Organization for Economic Co-operation and Development) நாடுகளுக்கும் இடையே இருக்குமளவுக்கு இருக்கிறது.

வடக்கை விட தெற்கு ஏன் மிகவும் சிறப்பாக செயல்படுகிறது? இவை இரண்டுக்கும் ஆரம்பப்புள்ளி ஒரே மாதிரியாக இருந்ததைக் கருத்தில் கொள்ளும்போது இதற்கு வரலாற்றுக் காரணமோ அல்லது இன அடிப்படைவாதமோ இல்லை என்பது உறுதியாகும். தெளிவாகச் சொல்லப் போனால், இதற்கு இந்திய அரசாங்கத்தின் கொள்கை நிறைவேற்றமும் காரணம் இல்லை. அது கொள்கை முடிவுகளை மாநிலத்துக்கே விட்டு விடுவதால் அதன்

அதிகாரத்துவத்தின் திறனும் சில குருட்டு அதிர்ஷ்டங்களும் இதற்கு சாத்தியமானக் காரணங்களாக இருக்கலாம். மாநில அதிகாரத்துவத்தின் திறன் என்பது பெரும்பாலும் கொள்கை முடிவுகளை நிறைவேற்றுவதாகும். அதிர்ஷ்டம் என்பது, நீண்டகாலமாகவே, கொள்கைத் தொலைநோக்கு மற்றும் அமலாக்கம் என வேறுமாதிரியாகவும் அழைக்கப்படுகிறது.

அப்படியெனில், எதனால் தென் இந்தியாவில் இருக்கும் மாநிலங்களால் கொள்கையை நன்கு வடிவமைக்கவும் செயல்படுத்தவும் முடிந்தது? தென்னிந்தியாவில் உள்ள மாநிலங்கள் ஒப்பீட்டளவில் சிறந்த வளர்ச்சியடைவதற்கு துணை தேசியவாதம் ஒரு காரணமாக இருக்கலாம் என சில அறிக்கைகள் கூறுகின்றன.1 இந்தியாவில் துணை தேசியவாதத்தின் நிகழ்வுகள் பெரும்பாலும் மொழியியல் அடையாளத்தை அடிப்படையாகக் கொண்டிருப்பதால் அது பல்லாயிரம் ஆண்டுகள் பின்னோக்கிச் செல்கின்றன. உள்ளூர்மயமாக்கப்பட்ட புவியியல் சார்ந்த உணர்வானது பல்வேறு கோணங்களில் வளர்ச்சிகளை முடுக்கி விளைவுகளைத் தட்டி எழுப்புகிறது. ஏனெனில், ஒரு சமூக இனமான நமக்கு பொதுவான நோக்கம் இருக்கும் போது நம்மால் பெரிய விஷயங்களை சாதிக்க முடியும்.

துணை தேசியவாதம் அதிகமாக உள்ள மாநிலங்களுக்கு எதிர் உதாரணமாக பெரும்பாலும் உத்தரப்பிரதேசம் சொல்லப்பட்டு வருகிறது. அங்கே துணை தேசியவாதமே இல்லை. உத்தரப்பிரதேசம் என்கிற அதன் பெயர் கூட பொதுவானதும் பின் சிந்தனையாக முடிவு செய்யப்பட்டதும் ஆகும். இதனுடைய குறுகிய பெயரான `UP' என்பது காலனிய ஆதிக்கத்தின் போது அழைக்கப்பட்ட `ஐக்கிய மாகாணங்கள் (United Provinces)' என்பதற்கான ஓர் இந்துஸ்தானி மாற்றுப் பெயரைத்தான அது தக்க வைத்திருக்கிறது. தமிழ்நாடு, கேரளா போன்ற மாநிலங்களில் மொழி அடையாளமானது மற்ற துணைக்குழு அடையாளயங்களைத் தாண்டிப் பயணித்தது போல அல்லாமல் உத்தரப்பிரதேசத்தின் இந்தி மற்றும் உருது மொழி மீதான விசுவாசமானது மதத்திற்குப் பினாமியாக செயல்பட்டு வருகிறது. இன்று வரை அந்த மாநிலத்தில் இது தொடர்ந்து வருகிறது. அங்கே அரசுத் திட்டங்கள் எல்லாம் சாதி அல்லது மத சமூகங்களின் ஊடாகவேப் பார்க்கப்பட்டு வருகிறது.

கேரளாவோடு ஒப்பிடும்போது உத்தரபிரதேசத்தில் பொதுசேவைகளில் ஏற்பட்ட சிதைவின் விளைவாக அது ஒரு பின் தங்கிய மாநிலாமாக மாறி எதிர் திசையில் இயங்கி வருகிறது. பிரிட்டிஷ் ஆட்சியில் இப்போது கேரளாவில் இருக்கும் திருவாங்கூர் சமஸ்தான் மிகவும் பிரச்சனைக்குரிய இடமாக இருந்தபோது ஐக்கிய மாகாணங்கள் என அறியப்பட்ட UP நன்கு நிர்வாகம் செய்யப்பட்டு வந்தது.

ஒரு நாட்டின் மிகவும் முக்கியமான பொருளாதார வளம் என்பது அதன் மக்கள்தான் என்கிற நவீன யுகத்தின் மிகவும் எளிதான கருத்தைத்தான் இந்தியாவிலிருக்கும் மாநிலங்கள் பின்பற்றுகின்றன. ஆரோக்கியத்துடனும் நன்கு படித்த மக்களுடனும் ஓரளவுக்கு நன்கு செயல்படும் அரசும் இருந்தால் அங்கு பொருளாதாரம் சிறப்பாக இருக்கும். வட இந்தியாவை விட தென்னிந்தியாவில் வருமான அளவும், வேலை வாய்ப்பும் நன்றாகவே இருப்பதில் ஆச்சரியமில்லை.

## வெற்றியின் மீதான பொறுப்பு

தென்னிந்திய மாநிலங்கள் வெற்றி பெற்றிருந்தாலும் அதன் மீதான அழுத்தங்கள் அதிகரித்து வருகின்றன. தேசியவாத அரசியலால் தூண்டப்பட்ட இந்திய ஒன்றியம் கொள்கை உருவாக்கத்தை மையப்படுத்த முயல்கிறது. தேசிய அரசியலில் தென்னிந்தியாவின் முக்கியத்துவம் குறைந்து வருவதோடு அந்தப் பிராந்தியத்தில் ஏற்படும் செழுமையின் எழுச்சியோடு ஒத்துப் போகிறது. அவற்றின் வளர்ச்சி நிலையை வைத்துப் பார்க்கும்போது, தென்னிந்தியாவின் பிரச்சனைகள் பெரும்பாலும் வட இந்தியாவின் பிரச்சனைகளுக்கு நேர் எதிராக உள்ளது . மக்கள்தொகை அடிப்படையில் பார்த்தாலும் தென்னிந்தியா, நாட்டில் ஒரு சிறிய பகுதியாகத் தான் உள்ளது.

வட இந்தியாவில் ஆதிக்கமிக்க ஓர் அரசியல் சித்தாந்தமாக வளர்ந்து வரும் தேசியவாதமானது அரசியலிலும் கொள்கை உருவாக்கத்திலும் பன்முகத்தன்மையை விரும்பத்தக்கதாக நினைக்கவில்லை. மக்கள் தொகையில் வடக்கிற்கும் தெற்கிற்கும் இருக்கும் வேறுபாடானது ஏற்கனவே மக்கள் தொகை அதிகமிருக்கும் வடக்கிற்கு சாதகமாக இருந்து வரும் வேளையில், மக்கள் தொகை வளர்ச்சியானது அதை மேலும் அதற்கு

சாதகமாக்கும். இவையெல்லாம் தேர்தல் அரசியலில் தென்னிந்தியாவை இளைய கூட்டாளியாக ஆக்குவதோடு கொள்கை முடிவெடுப்பதில் அதற்கிருக்கும் தாக்கத்தையும் குறைப்பதாக உள்ளது.

ஆரம்பத்திலிருந்தே அதிகாரத்தை மையப்படுத்த வேண்டுமென்கிற தூண்டுதல் இந்திய ஒன்றியத்தின் ஓர் அம்சமாக உள்ளது.

இருபத்தொன்றாம் நூற்றாண்டில் இந்தியாவின் ஜனநாயகக் கட்டமைப்பின் சிக்கலான யதார்த்தம் நாட்டை விட கலாச்சாரம் மற்றும் அரசியல் ஆதிக்கமிக்கது என அனுமானித்திருக்கிறது. இந்திய ஒன்றியத்தின் வள ஒதுக்கீடு - நிதி அல்லது பிற வகையான வளங்களை சேகரித்து மீண்டும் மாநிலங்களுடன் பகிர்ந்து கொள்வது - வடக்கிற்குப் பெரிதும் ஆதரவாகவும் தெற்கிற்கு எதிராகவும் உள்ளது. ஒட்டுமொத்த அளவிலும் சரி, தனிநபர் அடிப்படையிலும் சரி தெற்கிற்கு அதிகமாக வரி விதிக்கப்படுகிறது, ஆனால் மக்கள்தொகை வளர்ச்சி குறைவாக இருப்பதால், அதற்கு ஈடாக குறைவான ஒதுக்கீட்டையேத் திரும்பப் பெறுகிறது.

வரி வருமான சேகரிப்பும் வள மறுஒதுக்கீடும் மையப்படுத்தப்பட்டிருப்பதால், கடந்த காலத்தை விட இப்போது மாநிலங்களுக்குத் தங்கள் கொள்கையில் புதுமையை உருவாக்க அல்லது அந்தப் புதுமைகளுக்கு நிதி வழங்குவதற்கான திறன் குறைந்துள்ளது. தேர்தல் அரசியல் காரணமாக இந்தியாவில் வடக்கிலும் மத்தியப் பகுதிகளிலும் இருக்கும் மாநிலங்களுக்கு வடிவமைக்கும் கொள்கைகள் தென்னிந்திய மாநிலங்களின் மீதும் திணிக்கப்படுகிறது. உதாரணமாக, கல்வித்துறையை எடுத்துக் கொண்டால் 2020 ஆம் ஆண்டு புதியக் கல்விக் கொள்கையின்படி, உயர்கல்வியில் (மேல்நிலைக் கல்விக்கும் மேலான பட்டப்படிப்பு போன்றவை) மாணவர்களின் சேர்க்கை 2035 ஆம் ஆண்டுக்குள் 50 சதவீதத்தை அடைய வேண்டுமென்பது இலக்காகும். ஆனால் தென்னிந்தியாவில் இருக்கும் சில மாநிலங்கள் இந்த இலக்கை ஏற்கனவே அடைந்துவிட்டன. வடக்கில் இருக்கும் மாநிலங்கள் இந்த இலக்கை அடையும் வரை தென்னிந்திய மாநிலங்கள் தற்போதைய நிலையிலேயே காத்திருக்க வேண்டுமென்பது போல வடிவமைக்கப்பட்டிருக்கும் கொள்கை வஞ்சிப்பதன் ஒரு வழியாகும்.

2026 ஆம் ஆண்டு மக்கள்தொகை அடிப்படையிலான ஒரு வெடிப்பு ஏற்படவிருக்கிறது. வடக்கிற்கும் தெற்கிற்கும் இடையேயான எதிர்கால அரசியல் அதிகார ஒதுக்கீட்டிற்கும் அது தொடர்பான வளங்கள் ஒதுக்கீட்டிற்கும் ஒரு பெரிய முரண்பாட்டுக்கு வழிவகுக்கும். 1976 ஆம் ஆண்டு உறுதி செய்யப்பட்ட தேர்தல் தொகுதி சீரமைப்பு - மக்கள்தொகைக் கணக்கெடுப்பின்படி மக்கள்தொகையில் ஏற்பட்டிருக்கும் மாறுதல்களின் அடிப்படையில் காலமுறைப்படி தொகுதிகள் ஒதுக்கீடும் மறுஒதுக்கீடும் - 2026 ஆம் ஆண்டு முடிவுக்கு வரும் சமயத்தில் மறுபடியும் தொகுதி சீரமைப்பு செய்யப்படும்.

மக்கள்தொகையின் அடிப்படையில் பாராளுமன்றத் தொகுதிகள் மறு ஒதுக்கீடு செய்யப்படும் இந்த செயல்முறையின்படி நாட்டை நிர்வகிப்பதற்கு ஒவ்வொரு மாநிலத்துக்கும் எந்த அளவுக்கு உரிமை இருக்கிறது என்பது முடிவு செய்யப்படும். ஏற்கனவே வட இந்தியாவை விட பாராளுமன்றத்தில் குறைவாகவே பிரதிநிதித்துவம் கொண்ட தென்னிந்தியா மிகவும் சிறப்பாக மக்கள்தொகைக் கட்டுப்பாட்டை செயல்படுத்தியதற்கு 'வெகுமதியாக' இதனுடைய அரசியல் பிரதிநிதித்துவத்தை மேலும் இழக்கவிருக்கிறது. . கொள்கை வகுப்பதில் மையப்படுத்தல் அதிகரித்து வருவதால், அதை முன்னிலைப்படுத்தவும், போராடவும் அதிகக் குரல்கள் தேவைப்படும் இந்த நேரத்தில் இது சரியாக நடைபெறவிருக்கிறது. இதன் அர்த்தம் என்னவெனில், கொள்கைகளை நிறைவேற்றி வெற்றி பெற்றதற்காக மீண்டும் தண்டிப்பது போன்றதாகும்.

தென்னிந்தியாவினுடைய வெற்றிகள் அதை ஒரு முரண்பாடான சூழ்நிலைக்கு இட்டுச் சென்றது: சுகாதாரம், கல்வி, பொருளாதார வளர்ச்சி போன்ற துறைகளில் பெற்ற வெற்றியைக் கொள்கை ஆட்சி தண்டித்திருக்கிறது; மக்கள்தொகைக் கட்டுபாட்டில் பெற்ற வெற்றிக்காக 2026 ஆம் ஆண்டு ஏற்படவிருக்கும் அரசியல் பிரதிநிதித்துவத்துவ சீரமைப்பிலும் இதே போல தண்டிக்கப்படும். இந்த மாதிரியான தாக்குதல்களை பிராந்தியம் எப்படி சமாளிக்கும்?

இந்தியாவின் அரசியலமைப்பில் இருக்கும் பல பிரிவுகளுக்கு இடையேயான பதட்டம் ஒன்றும் புதியது இல்லை. இந்தியா என்று எப்போது உதயமானதோ அப்போதிலிருந்தே பிரச்சனைகள் இருந்து வருகின்றன. அரை நூற்றாண்டுக்கு முன்பே திராவிட முன்னேற்றக்

கழகத்தின் தோற்றுநரான சி என் அண்ணாதுரை மக்களவையில் அவருடைய கன்னிப்பேச்சில் இதைப் பற்றிப் பேசியிருக்கிறார். நவீன அரசியலமைப்பு குடியரசான இந்தியா, கூட்டாட்சி ஒன்றியமாக வடிவமைக்கப்பட்ட கருத்தாக்கத்தை மையமாக வைத்து அவர் கேள்விகள் கேட்டார். அந்த பேச்சிலிருந்து அதிகமாக மேற்கோள் காட்டப்படும் பகுதி கீழே கொடுக்கப்பட்டிருக்கிறது.

> பெருமதிப்புக்குரிய அவைத்தலைவர் அவர்களே, இப்போது இந்தியாவின் ஒரு பகுதியாக இருக்கிற ஒரு நாட்டிலிருந்து நான் வந்திருக்கிறேன், அதில் வேறு இனத்தைச் சேர்ந்தவர்கள் வாழ்கிறார்கள். ஆனால் அதற்காக அவர்கள் விரோதியாக இருக்க வேண்டுமென்கிற அவசியமில்லை. நான் திராவிட இனத்தைச் சேர்ந்தவன். நான் என்னை திராவிடன் என்று அழைத்துக் கொள்வதில் பெருமைப்படுகிறேன். இப்படிக் கூறுவதால் நான் வங்காளிக்கோ மராட்டியருக்கோ குஜராத்தியருக்கோ எதிரானவன் இல்லை. ராபர்ட் பர்ன்ஸ் சொன்னது போல, `மனிதன் எப்படியிருந்தாலும் மனிதன்தான்'. நான் என்னைத் திராவிட இனத்தைச் சேர்ந்தவன் என்று சொல்லிக் கொள்ளும்போது திராவிடர்களுக்கு, இந்த உலகுக்கு வழங்க திட்டவட்டமான, தனித்துவமான, மற்றவற்றிலிருந்து வேறுபட்ட சில அம்சங்கள் இருக்கின்றன எனக் கருதுகிறேன். அதனால், எங்களுக்கு சுயநிர்ணய உரிமை தேவை என்று விரும்புகிறோம்.2

அண்ணாதுரை புதிதாக எதையும் சொல்லவில்லை. புராதன கிரேக்கத்தைச் சேர்ந்த தத்துவவியலாளர்களால் அவ்வப்போது சொல்லப்பட்டு வந்த அரசியல் சொல்லாட்சியைத் தான் அண்ணா எதிரொலித்தார். துரதிர்ஷடவசமாக, இருபத்தியோராம் நூற்றாண்டின் மிகை தேசியவாத ஊடகச் சூழல் இந்த உரையாடல் பிரதிக்கு அல்லது இதை மறுசொற்றொடாக்கம் செய்து அதைத் தேசத்துரோகமான பேச்சு என எதிர்வினையாற்றி வருகின்றன. எல்லாவற்றிற்கும் மேலாக, பதினேழாம் நூற்றாண்டைச் சேர்ந்த டச்சு தத்துவஞானி பரூச் ஸ்பினோசா (Baruch Spinoza), `தனிமனிதனின் செழுமை என்பது கூட்டு வளர்ச்சியின் செழுமைக்கு அவசியமான நிபந்தனையாகும்' என்றார். ஒன்றியம் செழித்தோங்கும் நம்பிக்கையைக் கொண்டிருக்க வேண்டுமென்றால் ஒன்றியத்தை உருவாக்கும் பகுதிகள் செழித்தோங்க வேண்டும்.

இருப்பினும், இந்தியாவானது அதனுடைய அடிப்படையான தேசக் கட்டமைப்பில் இன்னும் மிகவும் தாராளமயமானதாக ஆகவில்லை. ஆங்கிலேயர்களின் கீழ் அல்லது சமஸ்தானங்களின் கீழ் ஆட்சிக்குட்பட்டிருந்தப் பகுதிகளை புதிதாக வடிவமைக்கப்பட்ட கூட்டாட்சி ஒன்றியத்தில் சேரும்படி முறையான கருத்தெடுப்பின் மூலம் கேட்டுக் கொள்ளவில்லை. இது முற்றிலும் நம்பத்தகுந்த வழிமுறையாக இருந்தாலும் பிரதேசங்கள் மற்றும் மக்களின் இணைப்பை சட்டப்பூர்வமாக்குவதற்கு கருத்தெடுப்புகளை உபயோகப்படுத்தவில்லை.

உதாரணமாக, ஹைதராபாத் நிஜாம் ஆண்டு வந்த பகுதிகளை இணைப்பதற்கு அப்பகுதியில் வாழ்ந்த மக்களிடம் அவர்கள் புதிதாக வடிவமைக்கப்பட்ட இந்திய ஒன்றியத்தின் ஒரு பகுதியாக இருக்க விரும்புகிறார்களா, இல்லையா எனக் கேட்டிருந்தால் ஏற்புடையதாக இருந்திருக்கும். மக்களும் இதைப் போன்ற ஒரு செயலுக்குக் நிஜாமை எதிர்த்து வந்த மக்கள் ஆதரவாக இருந்திருப்பார்கள். ஆனாலும் கூட, சம்மதம் கோருவது போன்ற கேள்விகள் எதுவும் அப்போது பரிசீலிக்கப்படவில்லை.

அது உருவான போது பிராந்திய லட்சியங்களும் அதற்குப் பிறகு பிராந்திய ஒருமைப்பாடும் இந்தியாவின் முக்கியமான அக்கறையாக இருந்தன. சுதந்திரப் போராட்டத்தின் போதும் அதற்குப் பிறகும் இருந்து ஒன்றியத்தின் சாத்தியம் குறித்த பயம் இதற்குப் பங்களித்தது என்பதில் சந்தேகமில்லை. இந்தியா சுதந்திரமடைவதற்கு முன்பாக நடந்த ஒரேயொரு கருத்தெடுப்பு 1947 ஆம் ஆண்டு ஜூலை மாதம் அஸ்ஸாமில் இருக்கும் சில்லெட் (Sylhet) மாவட்டத்தில் நடந்ததாகும். அதன்படி அது கிழக்கு பாகிஸ்தானுடன் இணைந்தது.

1947 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதத்துக்குப் பிறகு, சுதந்திரம் அல்லது தன்னாட்சி அல்லது அது போன்ற வேறு கோரிக்கைகள் சுதந்திர இந்தியாவின் பல பகுதிகளிலிருந்தும் - நாகலாந்திலிருந்து காஷ்மீர் வரை, அங்கிருந்து பஞ்சாப் வரை எழுந்தன. ஆனால் அவையனைத்தும் பிரத்யேக இராணுவம் கொண்டு அடக்கப்பட்டன.

இந்தியா சுதந்திரமடைந்த நேரத்தில் பெரும்பாலான உலகத்தலைவர்கள் இந்தியா தோல்வியடைந்துவிடும் என நினைத்தனர். ஆனால் என்ன விலை கொடுத்தாலாவது அவர்கள் நினைப்பது தவறு என்பதை நிரூபிக்க வேண்டுமென்கிற வகையில்

இந்தியா செயல்பட்டது. சிக்கலான ஜனநாயகக் கட்டமைப்பையும், கடினமான வரலாற்றையும் கொண்ட இந்தியா வாதத்துக்குரிய உறுதிமொழிகளையும், எதிர்காலத்தில் அதிகரிக்கக்கூடிய சிக்கல்களையும் எப்படி சமாளிக்கும்?

## இந்தியாவின் பிளவுகள்: இவற்றை சமாளிக்க இயலுமா?

இந்தப் புத்தகத்தின் முதல் பகுதி, இந்திய மாநிலங்களுக்கிடையே அம்மக்களுக்கான சுகாதாரம், கல்வி, பொருளாதார வளர்ச்சி அளவீடுகளின் அடிப்படையில் இருக்கும் வேறுபாடுகளை நிலைநாட்டும். . இந்த முக்கியத் துறைகள், மற்றத் துறைகளில் உள்ள மற்ற அளவீடுகளுக்கு மேலே கருதப்படுகின்றன, ஏனெனில் அவை தனிநபர் நிலையிலும், மக்கள்தொகை நிலையிலும் வாழ்க்கையை அளவிடுகின்றன. இதையும் கூட புறநிலையாகவும் எளிதாகவும் அளவிடலாம். கூடுதலாக, இவை ஒவ்வொரு துறைக்கும், ஒவ்வொரு அளவீட்டுக்கும் காரணமாக அல்லது விளைவாக இருக்கும்.

மாநிலங்களை வரிசைப்படுத்துவது என்பது அரசியல்வாதிகளையும் அரசியல் ஊடகங்களையும் பொறுத்தவரையில் கேளிக்கை விளையாட்டாக இருக்கிறது. இந்த செயல்பாட்டில் சமீபத்திய அல்லது மீசிறப்பாகத் தேர்வு (cherry-picked) செய்யப்பட்ட புள்ளிவிவரத்தை ஆதாரமாகக் காட்டுவது நடக்கிறது. சமீபத்தில், அரசாங்கம் கூட இந்த `விளையாட்டில்' பங்கெடுத்துக் கொண்டு உபயோகமான ஆனால் தரவுகளிலும், தகவல் சேகரிக்கப்பட்ட முறையிலும் பல தவறுகளைக் கொண்ட அறிக்கையை வெளியிட அது குறித்து எழுந்த கேள்விகள் பதில்களை விட அதிகமாக இருந்தன. உதாரணமாக நிர்வாகச் சீர்திருத்தங்கள் மற்றும் பொதுமக்கள் குறைகள் துறையானது (Department of Administrative Reforms and Public Grievances),வருடா வருடம் வளர்ச்சியில் ஏற்பட்ட முன்னேற்றத்தை அளவிட்டு, வருடாந்திர அறிக்கையான `நல்லாட்சிக் குறியீடு (The Good Governance Index)' என்கிற அறிக்கையை வெளியிடும்.

இந்த அரசுகள் வெளியிடும் அறிக்கைகளில் சில அளவீடுகள் இன்றியமையாதவை, சில அளவீடுகள் முக்கியமற்றவை; ஆனால் போதுமான முக்கியத்துவம் கொடுக்கப்படாமல் அனைத்து அளவீடுகளும் சமமாகக் கருதப்பட்டு குறியீடு கணக்கிடப்படுகின்றன. அதுபோல எங்கெல்லாம் அளவீடுகளுக்கு புள்ளி மதிப்பு (weightage) தெரிவு செய்யப்படுகிறதோ அதற்கான காரண விளக்கமும் தெளிவாக இல்லை.

உதாரணமாக, வணிகம் மற்றும் தொழில்துறைக்கான மாநில தரவரிசையைக் குறிப்பிடலாம். இந்தக் குறியீட்டு எண்ணில் `எளிதாக தொழில் செய்வது' மற்றும் `ஸ்டார்ட்-அப் தரவரிசை' ஆகிய இரண்டு அளவீடுகளும் பெரிதும் தாக்கத்தை ஏற்படுத்தும். இந்த இரண்டு அளவீடுகளும் உண்மையான முன்னேற்றத்தைப் பிரதிபலிக்காத பரந்த அளவிலான உள்ளீட்டு அளவுருக்களை கணக்கீட்டுக்கு எடுத்துக் கொண்டன. இதனால் ஓர் அபத்தமான தரவரிசை வெளியிடப்பட்டது. அதன்படி, குறைந்த எண்ணிக்கையிலேயே தொழில்களைக் கொண்ட பின் தங்கிய நிலையில் இருக்கும் மாநிலமான மத்தியபிரதேசம் இந்தியாவின் தொழில்மயமான பல மாநிலங்களை விட தரவரிசையில் முன்னணியில் இருப்பதாக 2019 ஆம் ஆண்டு வணிகம் மற்றும் தொழில்துறைக்கான அறிக்கையில் குறிப்பிடப்பட்டிருந்தது.

இன்னொரு உதாரணம், நிதி ஆயோக்கின் `நிலைநிறுத்தத்தக்க வளர்ச்சி இலக்கு (Sustainable Development Goals - SDG)' **கண்காணிப்பு** அறிக்கையாகும். நிதி ஆயோக் இந்த SDG இண்டியா குறியீடு அறிக்கையை அதனுடைய இணைய தளத்தில் வெளியிட அதிலும் இதே பிரச்சனைதான். இந்த அறிக்கைகளில் மாநிலங்களை ஒப்பிட்டுப் பார்ப்பதின் நோக்கம் ஒன்றியத்தின் கொள்கை தனிச்சிறப்புரிமைகளின் அடிப்படையில் அன்றைக்கிருக்கும் மாநில அரசுகளை மதிப்பிடுவதாகத் தெரிகிறது.

உதாரணமாக, இந்த SDG இண்டியா குறியீடு அறிக்கையில் ஒன்றிய அரசின் நிதியுதவி திட்ட செயலாக்கங்கள் மற்றும் ஆதார் இணைப்பு ஆகியவற்றின் அடிப்படையில் மாநிலங்களுக்கு மதிப்பெண் அளிக்கப்பட்டு தரவரிசைப்படுத்தப்பட்டிருக்கிறது. இது அரசியல் அமைப்பால் வெளியிடப்பட்ட ஓர் அரசியல் அறிக்கை. இந்த மாதிரியான அறிக்கைகளுக்கு இடமிருக்கும்போது அதை நாம் அப்படியே எடுத்துக் கொள்ளாமல் எச்சரிக்கையுடன் உபயோகப்படுத்த வேண்டும். மாநிலங்களின் வளர்ச்சி மற்றும் நீண்டகால செயல்திறனின் உண்மையான மதிப்பீடுகள் இந்த மாதிரியான அறிக்கையில் இழக்க நேரிடும், குறிப்பாக மிகவும் மெதுவாக மாற்றங்களை ஏற்படுத்தும் முக்கியமான விஷயங்களின் முன்னேற்றமானது ஆண்டுக்கு ஆண்டு பதிவு செய்யப்பட வேண்டும்.

அளவுருக்களின் அடிப்படையில் தென் மற்றும் வட மாநிலங்களை ஒப்பிடும் போது, வடக்கை ஏன் தெற்கு முந்தியது,

தெற்கை மத்திய அரசு எந்த வழிகளில் எல்லாம் புறக்கணிக்கிறது, அதன் அர்த்தம் என்ன என்றும் பார்ப்போம். இந்தப் பிரச்சனைகள் பெரும்பாலும் நிதிநிலை அறிக்கை, வரிக் கொள்கை அல்லது ஒதுக்கீடு விகிதங்களில் வெளிப்படும். ஆனால் யதார்த்த வாழ்க்கையில் இதனுடைய தாக்கம் மிகவும் பெரிதாகும்.

இரண்டாவது பகுதியில், ஏற்கனவே வேறுபட்டிருக்கும் கூட்டாட்சி ஒன்றியத்தில் வளர்ச்சியின் அளவீடுகளில் இருக்கும் வேறுபாட்டின் மீதான விளைவுகளை இந்தப் புத்தகம் ஆராய்கிறது. இந்தியாவின் அரசியல் கட்டமைப்பின் தனித்தன்மையைக் கருத்தில் கொண்டால், தென்மாநிலங்களில் அதனுடைய விளைவானது எதிர்மறையானதும் பேரழிவு தரக்கூடியதுமாக இருக்கிறது. அதன் விளைவுகளும் படிப்படியாக மோசமடைகின்றன

இந்த சிக்கல்களில் பல தீர்க்க முடியாததாகத் தோற்றமளிக்கிறது. இதற்கு எளிமையான, சோம்பேறித்தனமான, உடனடியான எதிர்வினை என்னவெனில் வின்ஸ்டன் சர்ச்சில் செய்தது போல, இந்தியாவை ஒன்றுக்கொன்று விரோதத்துடனோ அல்லது இணக்கத்துடனோ இருக்கும் சிறிய பகுதிகள் அல்லது மாநிலங்களாகத் துண்டாக்குதல், (balkanization) அல்லது கணிப்பதாகும். ஆனால் பல பிரச்சனைகள் தற்போதுள்ள அரசியல் கட்டமைப்பின் மோசமான பரிமாற்ற செயல்திறனிலிருந்தே எழுகின்றன.

புத்தகத்தின் இறுதிப் பகுதி இந்தியாவின் ஜனநாயக கட்டமைப்பை மறுபரிசீலனை செய்வதோடு இந்த பிரச்சனைகளுக்கு சாத்தியமான தீர்வுகளையும் பரிசீலிக்கிறது. பரிமாற்றத் திறனை மேம்படுத்தவும், வன்முறை மற்றும் பிரிவினை அச்சுறுத்தல்களைத் தவிர்க்கவும், இந்தியா எதிர்கொள்ளும் கடினமான வளப் பங்கீட்டுப் பிரச்சனைகளைத் தீர்ப்பதற்கான சிறந்த வழிகளைக் கண்டறியவும் ஜனநாயகக் கட்டமைப்பை நாம் மீண்டும் கற்பனை செய்ய முடியுமா?

இந்த சமயத்தில் சிந்தனை ஒன்றை பரிசோதித்துப் பார்ப்பது சிறப்பாக இருக்கக்கூடும்: பிரிவினை முறையைத் தவிர்த்து, இன்னும் ஒரு பரவலாக்கப்பட்ட அரசியலை அடைய, பண்டைய ஏதென்ஸின் ஜனநாயகத்தையும் நவீன பாதுகாப்பையும் இணைக்கும் (ஆட்ட) விதிகளுக்கு உட்பட்ட நேரடி ஜனநாயகத்தை பரிசோதித்துப் பார்ப்பதாகும். இது பழமைவாத வடிவமைப்பின் மூலம் அறிவூட்டும்/ தெளிவூட்டும் தாராளமயத்தை அடைவதை நோக்கமாகக் கொண்டிருக்க வேண்டும். இது ஜனநாயகத்திற்கான பிளாக்செயின் போன்றது.

# பகுதி - I

# சீராய்வு

# 1

# சுகாதாரம்

## இந்தியாவின் சுகாதார அறிக்கை

ஒரு சமூகம் செழிப்பதற்கு தனிப்பட்ட நபர்களின் ஆரோக்கியம் மிகவும் முக்கியமானது என்பது வெளிப்படையாகத் தெரிந்த ஒன்றாகும். உதாரணமாக, உடல்நலத்துடன் இருக்கும் தனிநபர்கள் அதிக ஆக்கவளமுடையவர்களாக இருப்பார்கள். இருந்தாலும், தாராளவாத சமூகம் அதன் குடிமக்களுக்கு சுகாதார பாதுகாப்புக் கொடுப்பதன் பிரதானமான காரணம் அவர்களுடைய பொருளாதார விளைவாக்கத்தை மேம்படுத்துவது என்பது இல்லை. இது அவசியமான ஒரு தார்மீகத் தேவை என்பதோடு இதுவே அதன் நோக்கமும் ஆகும். இது உடல் ஆரோக்கியத்தை ஆளுகையாகவும் சமூக முன்னேற்றத்தின் உண்மையான அளவீடாகவும் மாற்றுகிறது. குறிப்பாக வளர்ந்து வரும் நாடுகளுக்கு இது பொருத்தமானதாகும். அங்கு போதுமான வளமின்மையும், கல்வியறிவின்மையும் நிலவுவதால் ஏற்கனவே இருந்துவரும் கடினமான பணியை மேலும் கடினமாக்கியுள்ளது.

குறைந்த மற்றும் நடுத்தர வருமானம் கொண்ட சமூகங்கள் ஒரு தீய சுழற்சியில் மாட்டிக்கொண்டுள்ளன. வரையறையின்படி அவர்களது தனிநபர் வருமானம் என்பது அதிகமில்லை. இதன்படி அவர்களால் உடல் ஆரோக்கியத்துக்கு செலவு செய்வது என்பது வரம்புக்குட்பட்டது. இதன் விளவாக அவர்களது உடல் ஆரோக்கியம் பாதிக்கப்படும். இதனால் அவர்களின் வருமானம் ஈட்டும் திறன் குறைவதோடு அது அவர்களது பொருளாதார நிலை மேம்பாட்டைப் பாதிக்கும், எனவே,

சமூகத்தினுடைய உடல் ஆரோக்கியத்துக்கென செய்யப்பட வேண்டிய முதலீடு பாதிப்புக்குள்ளாகும். ஆகையால், வளர்ந்து வரும் நாடுகள், சில நாடுகள் தவிர, அனைத்தும் இந்தப் பொறியை உடைத்துக் கொண்டு வர சிரமப்படுகின்றன.

குறிப்பாக இந்தியாவின் நலவாழ்வு நிலைமை மிகவும் மோசமாக இருக்கிறது. உடல் ஆரோக்கியம் குறித்த அடிப்படை அளவீடான தனிமனிதரின் சராசரி ஆயுட்காலம் இந்தியருக்கு 66 ஆண்டுகளாக இருக்கிறது. இது போர் நிறைந்த ஈராக், சிரியாவுக்குப் பின்னால் ருவாண்டாவுக்கு இணையாக 125 ஆவது இடத்தில் இருக்கிறது. பொதுவாகவே வறுமையான பிராந்தியம் எனக் கருதப்படும் கிழக்கு ஆசிய நாடுகளில் ஸ்ரீலங்கா, பங்களாதேஷ், பூட்டான், நேபாளம் ஆகிய நாடுகளுக்கு பின்னால் இந்தியா இருக்கிறது. பாகிஸ்தான் மட்டுந்தான் இந்தியாவுக்கும் குறைவான தனிமனித ஆயுட்காலத்தைக் கொண்டிருக்கும் நாடாகும்.

மிகவும் வலுவானதும் முக்கியமானதுமான சிசு இறப்பு விகித (IMR) அறிகுறியில் கூட தெற்கு ஆசிய அண்டைநாடுகளுடன் ஒப்பிடும்போது இந்தியா அந்நாடுகளை விட மோசமான நிலையில் இருக்கிறது. பிறக்கும்போது எதிர்பார்க்கப்படும் ஆயுட்காலம் இந்தியாவில் குறைவாக இருப்பதற்கானக் காரணம் துரதிர்ஷ்டவசமாக அதிகமான குழந்தைகள் பிறந்தவுடன் இறந்து விடுவதாகும். தெற்கு ஆசியாவில் இந்தியாவை விட குழந்தைகள் இறப்பு விகிதத்தில் மோசமாக இருப்பது மீண்டும் பாகிஸ்தான் தான். நமக்கு அருகாமையில் இருக்கும் மற்ற நாடுகள் நமது நாட்டை விட ஏழ்மையில் இருந்தாலும் அங்கு குறைவான குழந்தைகளே இறக்கின்றன.

## மாறுபட்ட கதைகள்

குடிமக்களின் அடிப்படை உடல் ஆரோக்கியத்தில் இதுவரை இந்தியாவின் செயல்திறன் மிகவும் அலட்சியமாகவே இருந்து வருகிறது. ஆனால் அதே நேரத்தில் நம்முடைய ஆவணமும் அதிக மாறுபாடு கொண்ட ஒன்றாக இருக்கிறது (அட்டவணை 1). அனைத்து மாநிலங்களும் மோசம் என்று இல்லை. உதாரணமாக, பிறக்கும்போது எதிர்பார்க்கப்படும் ஆயுட்காலத்தின் அளவு உத்தரபிரதேசத்தை விட

கேரளாவில் பதினோரு ஆண்டு காலம் அதிகமாக இருக்கிறது. அதாவது, கேரளாவில் பிறக்கும் குழந்தையானது உத்தரபிரதேசத்தில் பிறக்கும் குழந்தையைவிட ஒரு தசாப்தத்துக்கும் அதிகமாக வாழும் என்று அர்த்தமாகும். பிறக்கும்போது எதிர்பார்க்கப்படும் ஆயுட்காலமானது தென்மாநிலத்தில் 75 ஆண்டுகள் ஆகும். இது அர்ஜெண்டினா, தாய்லாந்து போன்ற உயர்-நடுத்தர வருமான நாடுகளுடன் ஒப்பிடத்தக்கது. ஆயுட்காலம் 64 ஆண்டுகள் கொண்ட உத்தரபிரதேசமானது குறைந்த வருமானம் கொண்ட நாடுகளான ஹெய்தி, லைபீரியா, எத்தியோப்பியா ஆகியவற்றுடன் ஒப்பிடக்கூடியதாக இருக்கிறது.

**அட்டவணை 1: பிறக்கும்போது ஆயுட்கால எதிர்பார்ப்பு, மக்கள்தொகை கணக்கெடுப்பு, 2011**

| *மாநிலம்* | *பிறக்கும்போது ஆயுட்கால எதிர்பார்ப்பு (வருடங்கள்)* |
|---|---|
| ஆந்திரப் பிரதேசம் | 69 |
| அஸ்ஸாம் | 64 |
| பீஹார் | 68 |
| சத்தீஸ்கர் | 65 |
| குஜராத் | 69 |
| ஹரியானா | 69 |
| ஜார்கண்ட் | 67 |
| கர்நாடகா | 69 |
| கேரளா | 75 |
| மத்தியப் பிரதேசம் | 64 |
| மஹாராஷ்ட்ரா | 72 |
| ஒடிசா | 66 |
| பஞ்சாப் | 72 |
| ராஜஸ்தான் | 68 |
| தமிழ்நாடு | 71 |
| உத்தரப் பிரதேசம் | 64 |

| | |
|---|---|
| உத்தராகண்ட் | 72 |
| மேற்கு வங்காளம் | 70 |

*ஆதாரம்:* சாம்பிள் ரெஜிஸ்ட்ரேஷன் சிஸ்டம் (SRS), தலைமைப் பதிவாளர் மற்றும் மக்கள்தொகை கணக்கெடுப்பு ஆணையர் அலுவலகம், உள்துறை அமைச்சகம்.

பல்வேறு நோய்களின் நிகழ்வுகளும் அதனால் ஏற்படக்கூடிய இறப்பும் மக்கள்தொகையின் உடல்நலத்தை அறிந்து கொள்வதற்கான பொதுவான அறிகுறிகள் ஆகும். வளர்ச்சியடைந்த நாடுகளில் இந்தத் தரவு அளவீடுகள் எல்லாம் எளிதாகவும், சிரமமின்றியும் சீராகவும் வெளியிடப்படுவதோடு, குறிப்பாக, நம்பகத்தன்மை கொண்டதாகவும் இருக்கிறது.

வளர்ந்து வரும் நாடுகளில் உடல் ஆரோக்கியம் சார்ந்த அமைப்புகளும் மருத்துவமனைகளும் நோய்வாரியாக எத்தனை பேர் இறந்தார்கள் என்பதை நம்பத்தகுந்த வகையில் வெளியிடுவதில்லை. இதனால் பிறப்பு, இறப்பு தரவுகள் மட்டுமே நம்பந்தகுந்த முக்கியமான தரவுகளாக இருக்கின்றன. பிறக்கும்போது எதிர்பார்க்கப்படும் ஆயுட்காலம் முக்கியமான ஆவணங்கள் அடிப்படையிலான ஒரு அளவீடு ஆகும். ஆனால் அது உடல் ஆரோக்கிய அமைப்பில் ஏற்படும் மேம்பாடுகளை போதுமான அளவுக்கு சேகரிப்பதில்லை. அளவீட்டின் பெயருக்கு ஏற்றபடி இது தெரிவதற்கு வாழ்நாள் காலம் ஆகலாம்.

வழக்கமாக, இப்படிப்பட்ட நிலையில் சமூகத்தின் உடல் ஆரோக்கியத்தை அறிந்து கொள்வதற்கு உடனடியான அளவீடு என்னவெனில் சிசுக்களின் இறப்பு விகிதம் ஆகும். இது ஆயிரம் பிறப்புக்கு எத்தனை பேர் இறந்திருக்கின்றனர் என்பதைத் தெரிவிக்கும்.

கைக்குழந்தைகளுக்கு, இயற்கையாகவே, அவர்கள் கைக்குழந்தையாக இருக்கும் வரை கவனிப்புத் தேவை. துரதிர்ஷ்டவசமாக குழந்தை இறக்கும்போது மற்ற இறப்புகளைப் போல் அல்லாமல் அது IMR மூலம் எந்தவித தாமதமும் இன்றி தெரிந்து விடுவதால் அது ஒரு நல்ல அளவீடு ஆகும். மொத்த மக்கள் தொகையில் கைக்குழந்தைகள் பிரிவும் பாதிக்கப்பட்ட பிரிவுகளில் ஒன்றாகும்.

கைக்குழந்தைகளின் ஆரோக்கியம் மற்றும் உயிர்வாழ்வு பற்றிய கேள்வியானது, கவனிப்பை நாடும் மக்களின் நடத்தைகளை சமன் செய்யும் ஒரு சிறந்த சமனி. இது சுகாதார அமைப்பின் செயல்திறனுக்கான நல்ல சோதனையாக செயல்படுகிறது. குழந்தை இறப்பைத் தடுக்கும் காரணிகளில்

பெருமளவு அடிப்படை சுகாதாரப் பாதுகாப்பு நடைமுறைகள் சம்பந்தப்பட்டதுதானே தவிர உயர்தர வசதிகள் இல்லை; இது இதை ஒரு சமமற்ற ஆடுகளமாக ஆக்குகிறது. மிக முக்கியமாக, IMR- சம்பந்தப்பட்ட புள்ளிவிவரங்களை ஏழ்மையான நாடுகளில் கூட குறைவான அதிகாரத்துத்துவத்தைக் கொண்டு சேகரிப்பது எளிதாகும். ஆயுட்காலம் போலவே இது பிறப்பு மற்றும் இறப்புகளின் எண்ணிக்கை மட்டுமே, ஆனால் குறுகிய கால அளவாகும். எனவே IMR வலுவானது என்பதோடு அளவிட எளிதானது, ஏமாற்றுவது கடினமானது ஆகும்.

2018 ஆம் ஆண்டு `மாதிரி பதிவு அமைப்பு (Sample Registration System - SRS)' அறிக்கையின்படி இந்திய அளவில் IMR 32 ஆக இருந்தது. அதாவது, 1000 பிறப்புக்கு 32 இறப்பு என்கிற அளவில் இருந்தது. இந்தியாவானது கென்யா (31), எரித்திரியா (31), செனஹல் (32) ஆகிய நாடுகளுக்கு இணையாகவும், போரால் மோசமாகப் பாதிக்கப்பட்ட சிரியா (14), ஈராக் (23) ஆகியவற்றுடன் ஒப்பிடும்போது மோசமாகவும் இருக்கிறது. ஆனால் இந்தியா முழுமைக்கும் ஒரே அளவீட்டை உபயோகிப்பது தவறான முடிவுக்கு இட்டுச் செல்லும் (பார்க்க அட்டவணை 2)

**அட்டவணை 2: மாநிலங்கள் வாரியாக குழந்தைகள் இறப்பு விகிதம் (IMR), மே 2020.**

| *மாநிலம்* | *குழந்தைகள் இறப்பு எண்ணிக்கை* |
|---|---|
| ஆந்திரப் பிரதேசம் | 29 |
| அஸ்ஸாம் | 41 |
| பீஹார் | 32 |
| சத்தீஸ்கர் | 41 |
| குஜராத் | 28 |
| ஹரியானா | 30 |
| ஜார்கண்ட் | 30 |
| கர்நாடகா | 23 |
| கேரளா | 7 |
| மத்தியப் பிரதேசம் | 48 |
| மஹாராஷ்ட்ரா | 19 |

| *மாநிலம்* | *குழந்தைகள் இறப்பு எண்ணிக்கை* |
|---|---|
| ஒடிசா | 40 |
| பஞ்சாப் | 20 |
| ராஜஸ்தான் | 37 |
| தமிழ்நாடு | 15 |
| தெலுங்கானா | 27 |
| உத்தரப் பிரதேசம் | 43 |
| உத்தராகண்ட் | 31 |
| மேற்கு வங்காளம் | 22 |

*குறிப்பு:* குழந்தைகள் இறப்பு விகிதம், 1000 பிறப்புக்கு எத்தனை இறப்பு என்கிற எண்ணிக்கையாகும்.

*ஆதாரம்; சாம்பிள் ரெஜிஸ்ட்ரேஷன் சிஸ்டம், அறிக்கை 2020,* தொகுதி 55, எண். 1, தலைமைப் பதிவாளர் மற்றும் மக்கள்தொகை கணக்கெடுப்பு ஆணையர் அலுவலகம், உள்துறை அமைச்சகம், மே 2020.

உடல் ஆரோக்கிய அளவுருக்களில் இந்தியாவில் சிறப்பாகச் செயல்படும் கேரளாவின் IMR 2018 ஆம் ஆண்டில் 7 ஆகும். ஒப்பீட்டளவில் உலகில் மிகவும் சக்திவாய்ந்த நாடான அமெரிக்காவின் IMR 6 ஆகும். உடல் ஆரோக்கிய அளவுருக்களில் இந்தியாவிலேயே இரண்டு சிறந்த மாநிலமாக இருப்பது கேரளாவுக்கு அண்டை மாநிலமான தமிழ்நாடாகும். இதன் IMR 15. உயர் நடுத்தர வருவாய் கொண்ட நாடுகளுடன் ஒப்பிடும் போது இந்த எண்ணிக்கையானது தமிழ்நாட்டை அதற்கு இணையான நிலையில் வைக்கிறது. ஆனால் மஹாராஷ்டிரா (19), பஞ்சாப் (20), மேற்கு வங்காளம் (22), கர்நாடகா (23) ஆகிய மற்ற மாநிலங்கள் போரால் பாதிக்கப்பட்ட ஈராக்கை விட அதிகமாக அல்லது அதற்கு இணையான நிலையில் இருக்கின்றன.

இந்த அளவீட்டில் இந்தியாவிலேயே மிகவும் மோசமான எண்ணிக்கையைக் கொண்ட மாநிலம் மத்தியப் பிரதேசம் ஆகும். இதன் IMR 48 ஆகும். இதில் மத்தியப் பிரதேசம் கடைசி மாநிலமாக இருப்பது மட்டுமல்லாமல் காலப் போக்கில் மிகவும் மோசமாகவும் ஆகிவருகிறது. 2016 ஆம் ஆண்டில் இதன் IMR 47, 2018 ஆம் ஆண்டில் இது 48 ஆக உயர்ந்திருக்கிறது. நைஜரும், ஆப்கானிஸ்தானும்

போராலும் கலவரங்களாலும் மிகவும் பாதிக்கப்பட்ட நாடுகள் ஆகும். 2018 ஆம் ஆண்டில் இதன் IMR கூட 48 ஆகத்தான் இருந்தது.

7க்கும் 48க்கும் இடையில் பரந்து இருக்கும் இந்த IMR இடைவெளியானது - அமெரிக்காவுக்கும் ஆப்கானிஸ்தானுக்கும் இடையிலான இடைவெளி போன்றதாகும் - பெரும்பாலான ஐரோப்பிய நாடுகளை விட அதிக மக்கள்தொகை கொண்ட பெரிய மாநிலங்களுக்கும் ஒரே மாதிரியான அளவீட்டை உபயோகிப்பது யதார்த்தத்தை வெளிப்படுத்துவதற்கு போதுமானதாக இருக்காது என்கிற நம்பிக்கையற்ற தன்மையை வெளிப்படுத்துகிறது.

இதில் சுவராசியமான வினோதம் என்னவெனில் IMR தரவைப் பொறுத்தளவில் மாதிரி பதிவு அமைப்புக்கும் (SRS), தேசிய குடும்ப நல ஆய்வுத் (National Family Health Survey - NFHS4) தரவுக்கும் இடையே இருக்கும் வேறுபாடாகும். 2018 ஆம் ஆண்டு மாதிரி பதிவு அமைப்பு (SRS) அறிக்கையின் படி கேரளாவின் IMR 7 ஆனால் 2016 ஆம் ஆண்டு நான்காவது தேசிய குடும்ப நல ஆய்வு அறிக்கையின்படி கேரளாவின் IMR 6 ஆகும். அதுபோல மாதிரிப் பதிவு அமைப்பின்படி உத்தரப்பிரதேசத்தின் IMR 43, ஆனால் தேசியக் குடும்ப நல ஆய்வு அறிக்கையின்படி இது 64 ஆக இருந்தது. அதாவது, இரண்டு தரவுக்கும் இடையிலான வேறுபாடு அனைத்து மாநிலங்களுக்கும் ஒரே மாதிரியான போக்கில் இல்லை. அதற்குப் பதிலாக, இது சிறந்த மாநிலத்துக்கும், மோசமான மாநிலத்துக்கும் இடையேயான, குறிப்பாக இதில் மிகவும் கீழ் நிலையில் உள்ள மாநிலங்களின், வேறுபாட்டைப் பெரிதாக்கலாம்.

இருப்பினும், இந்த இரண்டு ஆய்வுகளுக்கும் உபயோகப்படுத்தப்படும் ஆய்வு நெறிமுறைகளை (methodologies) நினைத்துப் பார்த்தால் இந்த இரண்டுக்கும் இருக்கும் வேறுபாட்டுக்கான காரணம் தெளிவாகத் தெரியவரும். பிறப்பு, இறப்பு பதிவுகளைப் பொருத்து அதனுடைய உண்மையான எண்ணிக்கையை மாதிரிப் பதிவு அமைப்பு சுட்டிக்காட்டுகிறது. தேசியக் குடும்ப நல ஆய்வு என்பது மக்கள்தொகை ஆய்வாகும். ஆய்வின்போது இறந்த குழந்தைகள், கைக்குழந்தைகள் குறித்து கேட்பார்கள்.

உண்மையான பிறப்புகளின் எண்ணிக்கைக்கும் பதிவு செய்த பிறப்புகளின் எண்ணிக்கைக்கும் இடையேயான விகிதாச்சாரங்களும்,

**அட்டவணை** 3: **மாநிலம்வாரியாக** IMR, U5MR **அளவீடு**, 2015-16

| *மாநிலம்* | *IMR* | *U5MR* |
|---|---|---|
| கேரளா | 6 | 7 |
| தமிழ்நாடு | 20 | 27 |
| மஹாராஷ்டிரா | 24 | 29 |
| கர்நாடகா | 27 | 31 |
| பஞ்சாப் | 29 | 33 |
| மேற்கு வங்காளம் | 28 | 32 |
| ஜம்மு காஷ்மீர் | 32 | 38 |
| ஹரியானா | 33 | 41 |
| குஜராத் | 34 | 43 |
| இமாச்சலப் பிரதேசம் | 34 | 38 |
| ஆந்திரப் பிரதேசம் | 35 | 41 |
| தெலுங்கானா | 28 | 32 |
| ஒடிசா | 40 | 48 |
| ராஜஸ்தான் | 41 | 51 |
| ஜார்கண்ட் | 44 | 54 |
| அஸ்ஸாம் | 48 | 56 |
| பீஹார் | 48 | 58 |
| மத்தியப் பிரதேசம் | 51 | 65 |
| சத்தீஸ்கர் | 54 | 64 |
| உத்தரப் பிரதேசம் | 64 | 78 |

*குறிப்பு*: IMR, U5MR 1000 பிறப்புகளின் அடிப்படையில் கணக்கிடப்பட்டிருக்கிறது.
*ஆதாரம்: தேசியக் குடும்ப நல ஆய்வு (NFHS-4), 2015-16: இந்தியா,*
இண்டர்நேஷனல் இன்ஸ்டிடியூட் ஃபார் பாப்புலேஷன் சயின்சஸ், 2017

மருத்துவமனைகளில் நிகழக்கூடியப் பிறப்புகளின் எண்ணிக்கையும் குறைவாக இருக்கும் மாநிலங்களில், மாதிரி பதிவு அமைப்பு (SRS) கைக்குழந்தைகளின் இறப்பை குறைவாகக் கணக்கிட்டிருக்கக்கூடும். குழந்தையின் பிறப்பு பதிவு செய்யப்பட்டிருக்காத நிலையில் அதனுடைய இறப்பைப் பதிவேட்டிலிருந்து பெறுவது இயலாத காரியமாகும். ஆகையால், IMR பட்டியலில் கீழே இருக்கும் மாநிலங்களின் நிலையானது மாதிரி பதிவு அமைப்பின் (SRS) தரவுகள் வெளிப்படுத்துவதை விட மோசமாக இருக்கும்.